DVC NO.9/2023



DATE:14.11.2025
P.W.1 ASHA

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:</u>**

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள சங்கதி எனக்கு தெரியும். அதில் அனைத்தும் உண்மை. எனக்கு வயது 36. பிராமண வாக்குமூலம் தாக்கல் செய்யும் போது எனக்கு வயது 34 ஆனால் 33 என்று குறிபிட்டுள்ளேன். என்னுடைய பிறந்த தேதி 10.03.1989 ஆகும். திருமணம் ஆன நாள் 31.08.2006. திருமணம் ஆகும் போது எனக்கு 18 வயது ஆகும். திருமணம் ஆகும் போது எனக்கு 17 வயது என்றால் சரியல்ல. எனது கணவர் லாரி ஓட்டுநர் என்று எனக்கு தெரியும். எனக்கும் அவருக்கும் 14 வயது வித்தியாசம். எனக்கு குழந்தை 15.10.2007 வருடம் பிறந்தது. நான் அவருடன் 3 வருடம் வாழ்ந்தேன். எனது தாய்மாமன் முன்னிலையிலும் செலவிலும் எனது திருமணம் நடைப்பெற்றது. செலவு எவ்வளவு ஆனது என்று எனக்கு தெரியாது. வடபழனி முருகன் கோவில் எனது திருமணம் நடைப்பெற்றது. இருவருக்கும் பூர்விகம் சென்னை தான். நான் தற்போது இங்கு வசித்து வருகிறேன். திருமணம் ஆன உடன் கூட்டு குடும்பத்தில் வாழ்ந்து வந்தேன். நான் திருமணம் ஆன உடன் வேலைக்கு ஏதும் செல்லவில்லை. எனது செலவு எனது கணவர் தான் பார்த்துக் கொண்டார். என்னையும் எனது மகனையும் சரியாக பார்த்துக் கொள்ளதால் 3 வருடம் கழித்து பிரிந்து வந்தேன். குடித்து விட்டு வந்து வீட்டில் பிரச்சனை செய்வார். குழந்தைக்கு பால் பவுடர் வாங்கமால் நாய்க்கு பிஸ்கட் வாங்கி வந்து குழந்தை விட நாய் தான் முக்கியம் என்று சொல்லுவார். திருமணம் ஆன 1 வருடம் நன்றாக இருந்தோம். அதன் பிறகு தான் குடித்து வருவார். 3 வருடம் கழித்து என்னுடன் குழந்தையை தூக்கி சென்று விட்டேன். எனது குழந்தையை என் தாயார் வீட்டில் வைத்து பார்த்துக் கொண்டேன். சமதானம் செய்ய யாரும் மேற்கொள்ளவில்லை. சிறிய வயது என்பதால் மணவாழ்க்கையில் என்னால் ஏற்றுகொள்ள முடியவில்லை என்றால் சரியல்ல. சின்ன சின்ன விசயங்களுக்கு நான் தான் சண்டை போடுவேன் என்றால் அவர் தான் குடித்து விட்டு வருவார். திருமண ஆன நாளில் இருந்து வீட்டை விட்டு வெளி வரும் வரை என்னுடைய தேவைகள் மற்றும் அனைத்து செலவுகளையும் எனது கணவர் தான் பார்த்துக் கொள்ளவார் என்றால் சரிதான். வீட்டை விட்டு வெளியே வந்து 12 வருடங்களுக்கு கழித்து விவகாரத்து வழக்கு

தொடர்ந்தேன் என்றால் சரிதான். 13 வருடம் கழித்து எதற்காக மேற்படி வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் 2018 வருடம் நானாக அவர் வீட்டுக்கு குழந்தையுடன் சென்று மேற்கூரை அமைத்து வாழ்ந்து வந்தேன். அவர் வரவில்லை அதனால் 2019 வருடம் திரும்ப வந்துவிட்டேன். மேற்படி விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் குறிபிடவில்லை. என் கணவர் மீது உள்ள சொத்தை விற்பனை செய்ததை தெரிந்து கொண்டு அதில் உள்ள பணத்தை பெறுவதற்காக காலதாமதமாக மேற்படி வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. விவகாரத்து பெறும் போது பணம் ஏதும் வாங்க முயற்சி செய்ய வில்லை என்றால் சரிதான்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 14.11.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.